## நவம்பர் - 9

**"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது."**

**- கலா 5 : 17**

இங்கே தான் அந்த பெரிதானதும், தொடர்ச்சியானதுமான போர் இருக்கிறது. ஏனென்றால், புது சித்தம் தன்னையே உறுதிப்படுத்தி சரீரத்தை அடக்கி அதை புது மனதிற்கு அடங்கியிருக்க கட்டாயப்படுத்தினாலும், உண்மையாகவே மரித்திராத சாவுக்கேதுவான சரீரம் தொடர்ந்து உலகத்தோடும் எதிராளியோடும் தொடர்புக் கொண்டு, தொடர்ந்து இவைகளில் ஊக்குவிக்கப்பட்டு திரும்பவும் உலகப்பிரகாரமான கவலைகள், ஆதிக்கம், புகழ் முதலியவற்றைப் பெற அதிக ஆசை முறைகள், போட்டியிடுதல், சண்டைகள் நம்முடைய புது சித்தத்திற்கு அடங்காமை ஆகியவற்றால் உற்சாக மூடப்படுகிறது. எந்த ஒரு பரிசுத்தவானுக்கும் இந்தவிதமான அனுபங்களில்லாமல் இல்லை, அதாவது தனக்கு வெளியேயும், உள்ளேயும் உள்ள போராட்டங்கள். இது முடிவுவரையிலுள்ள ஒரு போராக இருக்க வேண்டும் அல்லது எந்த பெரிய பந்தயத்திற்காக நாம் போராடுகிறோமோ, அதை நாம் அடையமாட்டோம். ஏனென்றால், புது இருதயம், மனதும், சித்தமும் கர்த்தருடைய கிருபையினாலும், பலத்தினாலும், சாவுக்கேதுவான சரீரத்தை மறுபடி மறுபடி அடக்கியாண்டாலும் மரணப்பரியந்தம் போரை நிறுத்தக் கூடாது.

- Z ’03, 424 (R 3272)

மாம்சம் என்ற வார்த்தை இங்கே இயற்கையான அல்லது சம்பாதித்த மானிட குணத்தைக் குறிக்கிறது. ஆவி என்ற வார்த்தை விருத்தியாக்கப்படாத அல்லது விருத்தியாக்கப்பட்ட புது இருதயத்தையும், மனதையும், சித்தத்தையும் குறிக்கிறது. மாம்சம் சீரழியாமலிருந்தாலும் கூட ஆவிக்கு இன்னும் அது விரோதமானதாகவே இருக்கும். ஏனென்றால், அது பூமியிலிருந்து உண்டானது. பூமியின் தன்மையுள்ளதாயிருக்கிறது. ஆகையால், பூமிக்குரிய காரியங்களை நாடுகிறது. ஆவி பரலோகத்திற்குரியது. பரலோகத்திற்குரிய தன்மையுடையது. அது நாடுகிற பரலோகத்திற்குரிய காரியங்கள் பூமிக்குரிய காரியங்களை பலியிடுகிறதினால் மாத்திரமே பெறப்படுகின்றன. அப்படியிருப்பதால் மாம்சத்துக்கும், ஆவிக்கும் ஊடே ஒரு இடையறாத சண்டை இருந்துக் கொண்டே இருக்கிறது. நாம் செய்யச் சித்தங்கொள்ளுகிற பிரகாரம் பூரணமாகச் செய்வதை அதுத்தடுக்கிறது. மாம்சமோ அல்லது ஆவியோ மரிக்கும் வரை இந்த சண்டைத் தொடரும்.

- P ’32 162.

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 26:41; மாற் 7:21-23; ரோம 6:12-22; 7:14-25; 8:1-13; 13:11-14; 1பேது 2:11; 1கொரி 2:9; எபே 5:3-5; கொலோ 3:5; யாக் 3:14-16; கலா 5:16.

**கோபுர வாசிப்பு** : Z ’13, 103 (R 5211).

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? உதவியாக அல்லது தடையாக இருந்தது எது? பலன் என்ன?